3. ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

(ஆ) நடவடிக்கைச் சுருக்க வெளியீட்டில், பேசிய உறுப்பினர் ஒருவரின் பெயர் விடப்பட்டிருப்பது குறித்து.

திரு. ஓ. சுப்பிரமணியன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர்தான். முதல்நாள் பேசிய உறுப்பினர்களின் வரிசையில் திரு. விஜய ரெகுநாத தொண்டமான் பேசியிருக்கிறார். ஆனால் அதில் (சுருக்க வெளியீட்டில்) அவர் பெயர் விடப்பட்டிருக்கிறது. அது வேண்டுமென்றே விடப்பட்டதா அல்லது அகஸ்மாத்தாக விடப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய நினைவுறுத்தலுக்கு நன்றி. தவறுதான். திருத்திக் கொள்ளச் சொல்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். 6—7—1977 ஆம் தேதியன்று மூன்று பொது முக்கியத்துவமும் அவசரமுமான சம்பவங்கள் குறித்து விதி 42-ன் கீழ் தங்களுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே நான் பன்னிப் பன்னிச் சொல்லியாகிவிட்டது. தயவுசெய்து உறுப்பினரவர்கள் அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். சொல்லிவிட்டதையே மறுபடியும் சொல்ல வேண்டாம்.

திரு. கே. கந்தசாமி: நான் சொன்னதையே சொல்லவில்லை. நடவடிக்கை குறித்துச் சொல்கிறேன். அருள்கூர்ந்து எனக்கு விளக்கம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒருசில சம்பவங்கள் பற்றி,

continued strike of workers in the Indian Express.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து அனுமதியில்லாமல் இவற்றைப்பற்றிப் பேசக் கூடாது. அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள்.

திரு. கே. கந்தசாமி: ஒருசில நபர்களுக்கு மட்டும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அனுமதிக்க மாட்டேன். வேறு ஏதாவது பாயின்ட் ஆப் ஆர்டர் இருந்தால்தான் பேச வேண்டும்.

திரு. கே. கந்தசாமி: மற்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டு எனக்கு அனுமதி கொடுக்காததைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். பச்சையப்பா கல்லூரிபற்றி மாணவர்களின் கோரிக்கைபற்றிக் கொடுத்திருந்தேன் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சட்டம் படித்தவர். தலைவர் மேலே 'இன்சுனுவேட்' செய்வது மாதிரி இருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: எங்களுக்கு பாதுகாப்பு தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு உண்டு. ஆனால் நீங்கள் நேரடியாக, ஒருதலைப்பட்சமாக தலைவர் நடந்து கொள்கிறார் என்பதுபோல, மற்றவர்களுக்குச் சலுகையும், உங்களுக்குச் சலுகை இல்லை என்பது போலவும் சொல்கிறீர்களே, என்ன அர்த்தம் ?

திரு. கே. கந்தசாமி: எல்லா உறுப்பினர்களும் சமமாக நடத்தப்பட வேண்டுமென்ற உரிமையைத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைப் பொறுத்தவரையில் நிச்சயமாக அவ்விதம் நடந்துகொண்டுதான் இருக்கிறேன். ஆகவே, தயவுசெய்து இதை இதோடு விட்டுவிடுங்கள். அமருங்கள்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நேற்றைக்கு விடுபட்டுப்போன திருத்தங்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள் நேற்று அந்தச் சமயத்தில் இல்லாததால் இப்பொழுது அதனை அனுமதிக்கிறேன். 10-வது திருத்தம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கீழ்க்காணும் திருத்தங்களை நான் முன்மொழிகிறேன் :—

(1) வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவது பற்றியும்,

(2) வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட 1,500-க்கும் அதிகமான இளைஞர் அணியில் உள்ளவர்களுக்கு வாழ்வளிப்பது பற்றியும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.